2018 ஜூன் 5]

அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த வழித்தடத்தினை ஆய்வு செய்து, அந்த வழித்தடத்திலே பயணிக்கின்ற பயணிகளுடைய அடர்வுக்கு ஏற்ப பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

130—

அன்னதானத் திட்டம்

***9750—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, சுரண்டை பேரூராட்சியில் உள்ள அருள்மிகு வீரபாண்டீஸ்வரர் திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உலகப் பெண்ணினத்தின் ஒப்பற்ற தலைவர், வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, சுரண்டை பேரூராட்சியில் உள்ள அருள்மிகு வீரபாண்டீஸ்வரர் திருக்கோயிலில் போதிய நிதி வசதி மற்றும் இட வசதியின்மை காரணத்தினால் அன்னதானத் திட்டம் துவக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும் வணங்குகின்றேன். அதேபோல் நம்முடைய அம்மா அவர்களுடைய அரசை சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். அவரோடு துணை நின்று அரசை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய நம்முடைய துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

தென்காசி தொகுதி, சுரண்டை பேரூராட்சிக்கு உட்பட்ட அருள்மிகு வீரபாண்டீஸ்வரர் திருக்கோயிலானது தென்காசியிலிருந்து சுரண்டை பேரூராட்சிக்குச் செல்லக்கூடிய நுழைவுப் பகுதியில் உள்ளது. அந்தக் கோயிலானது சுமார் 5 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கு முன்பான, மிகவும் பழமையான திருக்கோயிலாகும். தினமும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் அந்தக் கோயிலுக்கு வந்து சென்று கொண்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, ஓர் ஆண்டுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட கல்யாணங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தக் கோயிலின் முன்பகுதியில் உள்ள நுழைவு வாயிலை நம்முடைய பக்தர்கள் எல்லோரும் சேர்ந்து சிறப்பாகக் கட்டியுள்ளார்கள். அதுமட்டுமல்ல, அந்த 5 ஏக்கர் நிலத்திலுள்ள அந்தக் கோயிலுக்கு அவர்களாகவே முன்வந்து ஒரு பகுதியில் அதனுடைய சுற்றுச் சுவரையும் கட்டியிருக்கிறார்கள். இதை ஏன் சொல்கிறேனென்றால், அந்த அளவுக்கு இந்தக் கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்களின் எண்ணிக்கை அதிகம். அதனை முன்வந்து

2018 ஜூன் 5]

தானே செய்யக்கூடிய பக்தர்களும் அதிகம் என்பதனால், வருடத்திலுள்ள முழு நாட்களுக்கும் தானாக முன்வந்து அன்னதானத்திற்கான பணத்தைக் கட்டுவதற்கான பக்தர்களும் அதில் இருக்கிறார்கள். அதனால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தானே முன்வந்து, அன்னமிட்ட நம்முடைய அன்னபூரணி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களில் ஒன்றான இந்த அன்னதானத் திட்டத்தை, நான் குறிப்பிட்ட இந்த வீரபாண்டீஸ்வரர் திருக்கோயிலிலும் செயல்படுத்த வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியான தென்காசி தொகுதியில், குற்றாலம் அருள்மிகு திருக்குற்றாலநாத சுவாமி திருக்கோயில், தென்காசி, அருள்மிகு காசி விஸ்வநாத சுவாமி திருக்கோயில், இலஞ்சி, அருள்மிகு திருவஞ்சி குமாரர் திருக்கோயில், கிருஷ்ணாபுரம், அருள்மிகு கோபாலகிருஷ்ண சுவாமி வகையறா ஆஞ்சநேயர் திருக்கோயில், தென்காசி நகர், அருள்மிகு பொருந்திநின்ற பெருமாள் திருக்கோயில், ஆயக்குடி, அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சாம்பவர் வடகரை, அருள்மிகு மூலநாத சுவாமி திருக்கோயில் ஆகிய 7 திருக்கோயில்களில் தற்போது அன்னதானத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், புதிதாக திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் முழுமையாக செயல்படுத்திட அத்திருக்கோயிலின் நிதி வசதி, இட வசதி, பக்தர்களின் கணிசமான வருகை, நன்கொடையாளர்கள் மற்றும் அன்னதானத் திட்டத்தில் பற்றாக்குறை ஏற்படின் அதனை ஈடுசெய்திட திருக்கோயிலின் முதன்மைக் கணக்கில் போதுமான நிதி வசதி இருக்க வேண்டும்.

முற்பகல் 11–15

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் திருக்கோயிலுக்கு போதுமான இட வசதி உள்ளது என்றும், இதற்குத் தேவையான நிதியுதவியை மக்கள் கொடுப்பதாகவும் கூறியுள்ளார். மாண்புமிகு

உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, சுரண்டை பேரூராட்சியில் உள்ள அருள்மிகு வீரபாண்டீஸ்வரர் திருக்கோயிலில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ள போதிய நிதி வசதி, இட வசதி மற்றும் பக்தர்களின் வருகை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.*

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, வடக்கே வடகாசி என்றால், தெற்கே தென்காசி. வரலாற்றுச் சிறப்புமிக்க தென்காசியில், காசி விஸ்வநாதர் திருக்கோயிலானது அமைந்துள்ளது. கிட்டத்தட்ட 32 ஆண்டுகளுக்கு முன்பாக அந்தக் கோயிலானது இடிந்த நிலையில் காணப்பட்டது. அப்போது நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், ஐயா சிவந்தி ஆதித்தனார் அவர்கள் முன்வந்து அந்தக் கோயில் திருப்பணியை துவங்கி வைத்து, அதாவது 25–11–1984 அன்று இதனுடைய முதல் பணியானது தொடங்கப்பட்டு, அதனுடைய முதல் தளத்தை ஐயா சிவந்தி ஆதித்தனார் அவர்கள் அந்தப் பணியை முடித்துக் கொடுத்ததன் விளைவாக, பணியானது கிட்டத்தட்ட 6 ஆண்டுகளில் முடிக்கப்பட்டு, கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அதேபோல, 2004 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த காசி விஸ்வநாதர் திருக்கோயில் திருப்பணிகளை மீண்டும் ஆரம்பித்து, கும்பாபிஷேகம் நடத்த வேண்டுமென்பதற்காக நம்முடைய அரசின் சார்பாக சுமார் 10 இலட்சம் ரூபாயை அந்தக் கோயிலுக்கு வழங்கி, அந்தத் திருப்பணியை துவங்கும்போதும் ஐயா சிவந்தி ஆதித்தனார் அவர்கள் மீண்டும் அந்தக் கோயிலுக்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் செய்து, கும்பாபிஷேகமானது 17–3–2006 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இப்போது கிட்டத்தட்ட 12 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையில், கும்பாபிஷேகமானது மீண்டும்

2018 ஜூன் 5]

நடத்தப்பட வேண்டும். அங்கு வரக்கூடிய பக்தர்கள் எல்லாம், அங்கு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்று வைத்த வேண்டுகோளுக்கிணங்க, அங்கு வரக்கூடிய பக்தர்களெல்லாம் அந்தத் திருக்கோயில் திருப்பணிக்கு தானே முன்வந்து நிறைய நன்கொடைகளையெல்லாம் வழங்குவதற்குத் தயாராக இருக்கக்கூடிய இந்த நிலையில், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கான திருப்பணியை செய்வதற்கு, கும்பாபிஷேகம் நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், காசி விஸ்வநாதர் திருக்கோயிலில் கடந்த 17–3–2006 அன்று குடமுழுக்கு நடைபெற்றது. ஆகம விதிகளின்படி 12 ஆண்டுகள் கழித்து, அதாவது 2018 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற வேண்டும். இத்திருக்கோயிலில் குடமுழுக்கு நடைபெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் அம்மா அவர்களின் அரசால் எடுக்கப்பட்டு, தற்போது தொல்லியல் துறையிடமிருந்து கருத்து கோரப்பட்டுள்ளது. மேலும், இத்திருக்கோயில் திருப்பணிக்காக சுமார் ரூ.3 கோடி அளவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பழமை மாறாக் குழு மற்றும் சென்னை உயர் நீதிமன்றக் குழுவின் கருத்துரு பெற்றவுடன், திருப்பணிகள் தொடங்கப்பட்டு, குடமுழுக்கு நடைபெறுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணை பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்கவுள்ளார்கள். அதற்குப் பிறகு, நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன்.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]